கடலூர் கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள்

வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணியில் தீவிரமாகப் பங்கேற்பீர்!

மாவட்டச் செயலாளர், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!

கடலூர், நவ.2-

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகளுக்கும் மற்றும் கழக தோழர்களுக்கும், உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கும், வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கும் (BLA2) மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்களுக்கும் (Blc) வேளாண்மை உழவர்நலத் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

தமிழ்நாடு முதல மைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2024ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று வெளியிட்டுள்ளது.

கடலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும், 27.10.2023 முதல் 09.12.2023 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர 04.11.2023 (சனிக்கிழமை), 05.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) - 18.11.2023 (சனிக்கிழமை) மற்றும் 19.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 வரை சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன் வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரி பார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2024 அன்று 18 வயது நிரம்பக் கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2024-ஆம் ஆண்டு ஜனவரி 1-ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு படிவம் 6லும், பெயர் நீக்கம் செய்திட படிவம் 7லும், வாக்காளர் விபரங்களில் உள்ள தவறுகளை திருத்தம் செய்திட, ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் திருத்தம், முகவரி மாற்றம், நகல் வாக்காளர் அடையாள அட்டை பெற (Replacement Id Card) படிவம் 8லும், அயல்நாடு வாழ் வாக்காளர் சேர்க்க (NRI Voters) படிவம் 6ஏ, ஆதார் எண் வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்க படிவம் 6பி, விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும்.

மேலும் வாக்கு சேர்ப்பதற்கு www.nvsp.in. மற்றும் www.voterportal.eci.gov.in என்ற இணைய தளத்திலும் விண்ணப்பிக்கலாம். இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாதவர்கள் மற்றும் இடம் மாறி வந்து வாக்காளர்களாக சேர்க்க விரும்புபவர்களும், பெயர் சேர்த்துக் கொள்ள வேண்டிய விண்ணப்படிவ மான படிவம்6ஐ முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும்.

குறிப்பாக படிவம்6ன் கலம் IVல் மனுதாரரது முந்தைய முகவரியினை தவறாது எழுதிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

1. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் - 27.10.2023

2. பெயர்களைச் சேர்க்க / நீக்க / திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் - 27.10.2023 முதல் 09.12.2023 வரை

3. சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் - 04, 05.11.2023 மற்றும் 18, 19.11.2023

4. இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் - 05.01.2024

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநகர மேயர், நகர, பேரூராட்சி, ஊராட்சிமன்ற தலைவர்கள், துணைத்தலை வர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (Blc) மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த பணியின் விவரத்தினை மாவட்ட கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு:

வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2க்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (blc) இந்த பணியினை முழுமையாக இருந்து நாடாளுமன்ற தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLO உடன் இருந்து கண்காணிக்க வேண்டும்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் ஜ்வாலா குட்டா அகாடமி ஆஃப் எக்ஸலன்ஸ் (ஹைதராபாத்) இடையே தமிழ்நாடு சென்னையை அடுத்த மேலக்கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் செயல்பட்டு வரும் பேட்மின்டன் அரங்கத்தில் ஜ்வாலா குட்டா அகாடமி ஆஃப் எக்ஸலன்ஸ்யின் பேட்மிட்டன் அகாடமி செயல்படுதல் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் விளையாட்டு விடுதி மாணவர்கள் ஹைதராபாத்தில் உள்ள ஜ்வாலா குட்டா அகாடமி ஆஃப் எக்ஸலன்ஸில் முதல்கட்டமாக விளையாட்டு பயிற்சிகள் மேற்கொள்ளுதல் தொடர்பாகவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று முன்தினம் (31.10.2023) சென்னையில் கையெழுத்தானது . இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, மற்றும் ஜ்வாலா குட்டா அகாடமி ஆஃப் எக்ஸலன்ஸ்நிருவாகி திருமதி. ஜ்வாலா குட்டா கலந்துகொண்டனர்.

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள் 100

நவம்பர் 2023 மாத நிகழ்வுகள் 10

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

வ.எண்	நிகழ்ச்சிகள்	நிகழ்ச்சி ஏற்பாடு	தலைமை	சிறப்பு அழைப்பாளர்கள்
1. 02/11/23 09.00AM	தலைவர் கலைஞர் எழுதிய "சேரன் செங்குட்டுவன்" நாடகம் மீண்டும் அரங்கேற்றம்	மாவட்ட, மாநகர நிர்வாகிகள்	இரா.மூக்கன், லீலா வேலு, பொன்செல்லையா, வி.சரோஜினி	அன்பகம் கலை கழக இணை அமைப்பு செயலாளர்
2. 03/11/23 09.00AM	சட்ட கல்லூரியில் மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி தலைப்பு : மாநில சுயாட்சி, அரசியல் சட்ட மாண்புகளை காப்போம்	மாவட்ட, மாநகர வழக்கறிஞர் அணி	கே.ஏ.வி.தினகரன் மாவட்ட அமைப்பாளர் எம்.பன்னீர்செல்வன் மாநகர அமைப்பாளர்	இரா.கிரிராஜன் MA., B.L., M.P., கழக சட்ட, திட்ட திருத்தக்குழு செயலாளர்
3. 04/11/23 06.00PM	தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம்	வார்டு எண் - 39,39A திருவெறும்பூர் பகுதி	ஐ.செல்வராஜ் வினோத் கனகராஜ்	தமிழ்.க.அமுதரசன் தலைமை கழக பேச்சாளர்
4. 05/11/23 06.00PM	தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம்	வார்டு எண் -12,12A மலைக்கோட்டை பகுதி	ஜெ.சிவகுமார் வி.ஜெயச்சந்திரன்	தமிழ். சாதிக் தலைமை கழக பேச்சாளர்
5. 18/11/23 08.00AM	மாவட்ட கழகம் சார்பில் திருச்சி கிழக்கு தொகுதியில் கழக கொடியேற்றுதல், மற்றும் தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் வகையில் அணிகளுக்கு கருத்துரை வழங்கும் விழா	திருச்சி தெற்கு மாவட்ட கழகம்	மாவட்ட கழக செயலாளர்	மாண்புமிகு க. துரை முருகன் கழக பொதுச்செயலாளர் 23 கழக சார்பு அணிகளுக்கு கருத்துரை வழங்குதல் (மாவட்டம் / மாநகரம்)
6. 19/11/23 09.00AM	தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் திரைப்பட கலைஞர்கள் பங்கேற்கும் கருத்தரங்கம்	மாவட்ட, மாநகர தொண்டர் அணி	என்.ஏ.உதயகுமார் மாவட்ட அமைப்பாளர் ஆ.தினகரன் மாநகர அமைப்பாளர்	பெ.சேகர் மாநில அணி செயலாளர் கருத்தரங்கம் திரைப்பட நடிகர். தம்பி ராமையா
7. 19/11/23 06.00PM	தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் பொதுக்கூட்டம்	வையம்பட்டி தெற்கு ஒன்றியம்	வி.ஏ.ராஜேந்திரன் ஒன்றிய செயலாளர்	.மா.சுப்பிரமணியன் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு சுகாதாரத்துறை அமைச்சர்
8. 26/11/23 07.00AM	திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம் 11 ஊராட்சிகளில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா கல்வெட்டு திறப்பு மற்றும் கொடியேற்று விழா	திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம்	கே.எஸ்.எம்.கருணாநிதி ஒன்றிய செயலாளர்	மாவட்ட கழக செயலாளர்
9. 26/11/23 06.00PM	தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் பொதுக்கூட்டம்	மருங்காபுரி தெற்கு ஒன்றியம்	சி.சின்ன அடைக்கண் ஒன்றிய செயலாளர்	.சி.வி.கணேசன் கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர்
10. 28/11/23 06.00PM	தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம்	வார்டு எண் - 17,17A மார்க்கெட் பகுதி	எஸ்.மனோகரன் ஆர்.எம்.சுப்ரமணியன்	மன்னை.இளங்கோ தலைமை கழக பேச்சாளர்

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி
செயலாளர்
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.

கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! டாக்டர் மு.க.முத்துக்கருப்பன் ஏற்பாடு!

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மருத்துவர் அணி சார்பில் மருத்துவ முகாம்!

அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் துவக்கி வைத்தார்!

புதுக்கோட்டை நவ.2

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மருத்துவர் அணி மற்றும் கற்பக விநாயகா மருத்துவக் கல்லூரி . சார்பில் மாபெரும் மருத்துவ முகாம் புதுக்கோட்டை மாவட்டம் பெருங்களூரில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் மு.க.முத்துக்கருப்பன் ஏற்பாட்டிலும், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையிலும் ,மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் மருத்துவர் எஸ்.ஆர்.அண்ணாமலை முன்னிலையிலும், நடைபெற்ற மாபெரும் மருத்துவ முகாமை சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வுகளில் கழக இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன, மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம். அப்துல்லா, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, கழுது விவசாய தொழிலாளர் அணி துணைத் தலைவர் த.சந்திரசேகரன், மாவட்ட அவைத் தலைவர் அரு.வீரமணி, மாவட்ட துணைச் செயலாளர்கள் எஸ்.எல். கருப்பையா, க.மதியழகன், பி.ராஜேஸ்வரி, ஒன்றியச் செயலாளர்கள் மு.க. ராமகிருஷ்ணன் , தவ. பாஞ்சாலன், ஆர், ஆர்.சாமிநாதன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சு. சண்முகம், வை.கோ.ராஜன், வி.என்.பாலமுருகன், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின் ராஜா, வே.ராஜேஸ், தபசு மணி முருகேசன், மு.கலைஞர் கருணாநிதி, மாவட்ட மருத்துவர் அணி தலைவர் டாக்டர் அமானுல்லா, துணை அமைப்பாளர்கள் டாக்டர் தவ.பா.உதயசூரியன், டாக்டர் மனோஜ்குமார், டாக்டர் பிரபாகரதாஸ் மற்றும் டி.சுப்பிரமணியன், வடவாளம் க.செ.மணிமாறன், ஞானசேகரன், தெய்வானை, ரவி, கா.கைலாசம், ஏ.எஸ்.கருணாநிதி.

சரண்யா ஜெய்சங்கர், முத்துலட்சுமி சாமி ஐயா, பொன்.செல்வராஜ், தமிழ்ச் செல்வன், முனியாண்டி, எல்.ஐ.சி கணேசன், ஓவியா, மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு

சேலம் கிழக்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிக்கை!

சேலம், நவ.2-

சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதல மைச்சரும் திராவிட முன்னேற்ற கழக தலைவருமான தளபதியார் அவர்களின் அறிவுரைப்படி இந்திய தேர்தல் ஆணையம் வரும் 01.01.2024 ஆம் தேதி தகுதி நாளாக கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தத் தினை இந்திய தேர்தல் ஆணையம் கீழ்க்காணும் அட்டவணைப்படி அறிவித்துள்ளது.

சேலம் கிழக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட நான்கு சட்ட மன்ற தொகுதிகளில் 27.10.2023 முதல் 09.12.2023 வரை புதிய வாக்காளர்களை சேர்க்கவும், பெயர்கள் நீக்கவும், திருத்தம் செய்யவும் மனு செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.தவிர நவம்பர் மாதம் 4, 5, 18, 19 ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 09 .30 மணி முதல் மாலை 05.30 மணி வரை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளன.அதன்படி இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன்வந்து வாக்காளர் பட்டியலில் உள்ள தங்களது பெயர் விவரங்களை சரி பார்த்து விடுபட்டவர் களும் இடம் மாறிய வாக்களர்களும் 01 .01.2024 அன்று 18 வயது நிரம்ப க்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்த படிவங்களை வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும். மேலும் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 27.10.2023பெயர்களை சேர்த்த, நீக்க, திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 27.10.2023 முதல் 09.12.2023 வரை சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் நாட்கள் நவம்பர் 4, 5, 18, 19 ஆகிய தேதிகளில் சிறப்பு முகாம்கள் நடைபெறும். இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படுவது 01.01.2024 மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர்கள் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், நகர மன்ற தலைவர், பேரூராட்சி தலைவர், துணைத் தலைவர் மற்றும் கவுன்சிலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் வாக்குச்சாவடி நிலை குழு முகவர்கள், மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் கழக அனைத்து அணிகளின் தலைவர், துணைத் தலைவர், மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், கழகத் தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு இந்த பணியின் விவரங்களை மாவட்டக் கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திருவாரூர் ஒன்றிய முன்னாள் செயலாளர் ஆர்.பி.எஸ். எனும் ஆர்.பி.சுப்பிரமணியன் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக, மாவட்ட தி.மு.க. சார்பில் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமையில் அமைதி ஊர்வலம் நடைபெற்று ஆர்.பி.எஸ். அவர்களின் உடலுக்கு மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தப்பட்டது. முன்னாள் அமைச்சர் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, ஒன்றிய பெருந்தலைவர் புலிவலம் ஏ.தேவா மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு செயலாளர்கள் மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள் , பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

திருவாரூரில் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை நடத்திய விழா!

பூண்டி கே.கலைவாணன் - அர.திருவிடம் பங்கேற்பு!

திருவாரூர்,நவ2-

திருவாரூர் மாவட்ட தி.மு.க. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டுவிழா நடைபெற்றது. இந்த விழாவில் கலைஞர் அவர்களின் திரைப்பட வசனம் மற்றும் , கவிதைகள் ஒப்புவித்தல்போட்டி நடைபெற்றது. மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., மாநில கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர் அர.திருவிடம் , மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் ராஜ்.என்கிற கருணாநிதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

திருவாரூர் நீயூ பரத் மெட்ரிக் மேல் நிலைப்பள்ளியில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழா பாடல் மற்றும் வசனைகள் ஒப்பித்தல்போட்டியில் ஏராளமான பள்ளி மாணவ - மாணவிகள் பங்கேற்றனர். விழாவிற்கு மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமை வகித்தார். கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில செயலாளர் அர.திருவிடம் போட்டிகளை துவக்கிவைத்து வாழ்த்தி பேசினார்.

நிகழ்வை ஏற்பாடு செய்து நடத்திய கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்டப் அமைப்பாளர் ராஜ்.என்கிற கருணாநிதி வரவேற்புரையாற்றினார்.

திருவாரூர் நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ், ஒன்றிய பெருந்தலைவர் புலிவலம் ஏ.தேவா , மாவட்ட தலைவர் ராசு இளங்கோவன் ஆகியோர் தொடக்க உரையாற்றினார். மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர்கள் கண்ணதாசன், ஏ.வி.பாலாஜி, ஜெயபால், பார்த்த சாரதி, எம்.முருகானந்தம், ஆர்.சக்திவேல் ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.

மாவட்ட துணை தலைவர் இராம.கலைச்செல்வன் நன்றி கூறினார்.

நிகழ்வில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவ - மாணவிகள் மாவட்டம் முழுவதும் உள்ள பள்ளிகளில் இருந்து பங்கேற்றனர். முதல் மூன்று இடம் பிடித்த மாணவ - மாணவிகளுக்கு ரொக்கம் மற்றும் சான்றிதழ்கள், கேடயங்களும் பரிசாக வழங்கப்பட்டதோடு, ஆறுதல் பரிசாக எட்டு மாணவிகளுக்கும் சான்றிதழ்களும் கேடயங்களும் வழங்கப்பட்டன.

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாநில அளவிலான கபடி போட்டி குத்தாலம் ராஜ் வித்யாலாயா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. போட்டியில் வெற்றிப் பெற்றவர்களுக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் பரிசுகளை வழங்கினார். உடன் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கு.வைத்தியநாதன், ப.முருகமணி, தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், குத்தாலம் ஒன்றியக் குழு தலைவர் மகேந்திரன், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் க,அறிவுச்செல்வன், துணை அமைப்பாளர்கள் கே.செந்தில்குமார், எஸ்.ஜீவானந்தம், ஆர்.மனோவாசாம்சன், வி.கலைச்செல்வன் மற்றும் பலர் உள்ளனர்.